**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.**

**DVCNo. 35/2023 PW . 1**

| | |
|---|---|
| Name : முத்து | Husband's Name : ஹரீஷ்சுப்பிரமணியன் |
| Village: | Taluk : |
| Age : | Occupation : |
| Caste : | Religion : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.01.2024

**எதிரிகள் ஆஜர்.**

---

**முதல் விசாரணை:**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். எனது தரப்பில் பிரமாணவாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்களை படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். திருமண அழைப்பிதழ் மசாஆ. 1. புகைப்படம் மசாஆ. 2. குடும்ப அட்டையின் ஒளிநகல் மசாஆ. 3. எனது ஆதார் அட்டையின் ஒளிநகல் மசாஆ. 4. 1.07.2022 தேதியிட்டு மருத்துவமனையில் எனக்கு வழங்கப்பட்ட டிஸ்ஜார்ஜ் சம்மரியின் ஒளிநகல் தாக்கல் செய்கிறேன் அது அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு மசாஆ. 5ஆக குறியீடு செய்யப்படுகிறது ( அந்த ஆவணம் மருத்துவமனையில் வழங்கப்பட்டுள்ளதால் உரிய மருத்துவ அதிகாரி மூலம் தான் குறியீடு செய்யப்பட வேண்டுமென எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) நான் காரைக்குடி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் கை நகல் மசாஆ. 6. புகார் ஏற்பு சான்றிதழ் மசாஆ. 7. மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.